திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)

Open Access & Peer Reviewed Journal

E-ISSN : 2583-0449

New Musical Adjectives in Kalavazhi Narpathu

M. Vijayalakshmi

Full Time Doctoral Researcher, Department of Tamil, The Standard Fireworks Rajaratnam College for Women, Sivakasi, India

Manuscript ID : **MT394A0147**

Volume : **3**

Issue : **3**

Month : **September**

Year : **2023**

Received: 17.07.2023
Revised: 07.08.2023
Accepted: 24.08.2023
Published: 20.09.2023

Pages : 28-35

DOI: 10.5281/zenodo.8363080

ABSTRACT:

Since the Sangam period, Love & heroism (Bravery) have often been the theme of literary works. They Categorize, “Love and married life of (Thalaivan) Chief & his Lover” as internal, and “King’s War, fame & people’s Bravery as External; “Kalavazhi Narpathu” is one of the books comes under the category of “Pathinen Keezkanakku Noolgal” appeared during Sangam Maruviya kalam”. It talks about External factors. Tholkappiyar divides the words combined by letters into four categories noun, verb, inter, and adjective. Based on Tolkappiya Rules New musical adjectives and words were analyzed through the book “Kalavazhi Narpathu”.

KEYWORDS:

Word Classification, Adjective Grammar, Classical Music Adjectives, New Musical Adjectives in the Kalavazhi Narpathu

களவழி நாற்பதில் புதிய இசை உரிச்சொற்கள்

மு. விஜயலட்சுமி

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

சங்ககாலத்திலிருந்து படைப்பிலக்கியங்களின் பாடுபொருளாக பெரும்பாலும் காதலும் வீரமுமே இருக்கின்றன. தலைவன் தலைவியரின் காதல் மற்றும் திருமண வாழ்வினை அகமென்றும் மன்னர்களின் கொடை, போர், புகழ் மற்றும் மக்களின் வீரம் முதலானவற்றைப் புறமென்றும் குறிப்பிட்டனர். சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான களவழி நாற்பது புறம் பற்றிப் பாடும் நூலாக அமைந்துள்ளது. எழுத்துக்கள் இயைந்து உருவாக்கும் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பிரிக்கின்றார், தொல்காப்பியர். தொல்காப்பிய விதியின் படியமைந்த புதிய இசை உரிச்சொற்கள் களவழி நாற்பது என்னும் நூல் வழி ஆய்ந்து நோக்கப்பட்டுள்ளன.

கருச்சொற்கள்

சொல் வகைப்பாடு, உரிச்சொல் இலக்கணம், தொல்காப்பிய இசை உரிச்சொற்கள், களவழி நாற்பதில் புதிய இசை உரிச்சொற்கள்

முன்னுரை

ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து சொற்களை உருவாக்குகின்றன. காலத்திற்கேற்ப புதிய சொற்கள் உருவாகிய வண்ணம் இருக்கின்றன. பழைய சொற்கள் பொருள் மாற்றம் அடைந்தோ அல்லது அழிந்தோ போகின்றன. கால மாற்றத்தின் காரணமாகவும் சொற்களை நாம் பயன்படுத்தாத காரணத்தினாலும் இத்தகைய நிலை ஏற்படுகின்றது. பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களுள் ஒன்றாக உரிச்சொல் திகழ்கின்றது. களவழி நாற்பதில் இடம்பெற்றுள்ள தொல்காப்பியரால் சுட்டப்படாத புதிய உரிச்சொற்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

சொல் இலக்கணம்

எழுத்துக்களால் அமைவது சொல். சொல்லப்படுவதால் சொல். இது மொழி, கிளவி, வார்த்தை என்னும் வேறு பெயர்களாலும் சுட்டப்பெறும்.

தொல்காப்பியம்

தொல்காப்பியரால் இயற்றப்பட்ட தொல்காப்பியம் என்னும் நூலானது எழுத்து, சொல் மற்றும் பொருளிற்கான இலக்கணங்களைக் கொண்டுள்ளது.


சொற்கள் அனைத்தும் ஏதேனும் ஒரு பொருளினை உணர்த்தியே வருகின்றன என்பதை,

“எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே”[1]

(தொல் (சொல்); சேனாவரையர்; நூற்பா-640)

என்னும் நூற்பாவின் வாயிலாக அறிய முடிகிறது.

தொல்காப்பியரின் சொல் வகைப்பாடு



சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நால்வகைப்படும் என்பதை,

“சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண்டு என்ப அறிந்திசி னோரே”2

(தொல் (சொல்); சேனாவரையர்; நூற்பா-643)

“இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப”[3]

(தொல் (சொல்); சேனாவரையர்; நூற்பா-644)

என்னும் நூற்பாக்களின் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

வ.எண்	சொற்கள்	விளக்கம்
1.	பெயர்ச்சொல்	ஒன்றன் பெயரைக் குறிப்பது.
2.	வினைச்சொல்	ஒன்றன் செயலைக் குறிப்பது.
3.	இடைச்சொல்	பெயர், வினைக்கு இடையில் வரும் சொற்கள்.
4.	உரிச்சொல்	பெயர், வினைகளைச் சார்ந்து இசை, குறிப்பு, பண்பின் அடிப்படையில் ஒருசொல் பலபொருட்குரித்தாயும் பலசொல் ஒரு பொருட்குரித்தாயும் வருவன.

மேற்கண்ட அட்டவணையின் வாயிலாகப் பெயர், வினை, இடை மற்றும் உரிச்சொல்லிற்கான விளக்கங்களை அறிய முடிகின்றது.

சொற்கள் பொருளுணர்த்தும் முறை

சொற்கள் இருதிணை, ஐம்பால் பொருள்களையும் மறைவின்றித் தெளிவாகக் காட்டுவது வெளிப்படை. சொல்பவன் குறிப்பாலும் முன்னும் பின்னும் அமைந்திருக்கும் பிற சொற்களாலும் பொருள் உணர்த்தும் முறையே குறிப்பாகும். இவ்வாறு வெளிப்படை, குறிப்பு என்னும் இரு முறைகளில் பொருள்களை உணர்த்துகின்றன என்பதை,

> **“தெரிபுவேறு நிலையலுங் குறிப்பில் தோன்றலும்**
> **இருபாற் றென்ப பொருண்மை நிலையே”[4]**
>
> **(தொல் (சொல்); சேனாவரையர்; நூற்பா-644)**

என்னும் நூற்பாவின் வாயிலாக அறிய முடிகின்றது.

தொல்காப்பியம் - உரிச்சொல்லிற்கான இலக்கணம்

அகத்தியரின் மாணவரான தொல்காப்பியரால் இயற்றப்பட்டது தொல்காப்பியம். தமிழில் கிடைத்த மிகப் பழமையான இலக்கண நூலாகத் தொல்காப்பியம் விளங்குகின்றது.

> **“உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை**
> **இசையினும் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்**
> **பெயரினும் வினையினும் மெய்தடு மாறி**
> **ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்**
> **பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்**
> **பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்**
> **தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்**

எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்”[5]

(தொல் (சொல்); சேனாவரையர்; நூற்பா-782)

என்னும் நூற்பாவின் வாயிலாக,

1. உரிச்சொல்லானது இசை, குறிப்பு, பண்பெனும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றும்.
2. பெயர் போலவும் வினை போலவும் தம் உருபு தடுமாறும்.
3. ஒரு சொல் பல பொருளைப் பெற்று வரும்.
4. பல சொல் ஒரு பொருளைப் பெற்றும் வரும்.
5. கேட்பவரால் பயிலப்படாத சொல்லைப் பயின்றப் பொருளோடு சார்த்திப் பொருளை உணர்த்தும்.
6. தமக்குரிய இயல்பில் நின்றும் தாம் பொருந்தி நிற்கும் பெயரும் வினையுமாகிய நிலைக்களன்களால் வேறுவேறு பொருள்களை உணர்த்தும் என்பதை அறிய முடிகிறது.

முத்து வீரியமும் தொல்காப்பியமும் உரிச்சொல் குறித்து ஒரே விதமான கருத்துக்களைத் பதிவு செய்துள்ளது.

“தமக்கியல்பில்லாத இடைச்சொற் போலாது இசை குறிப்புப் பண்பெனும் பொருட்குத் தாமே உரியவாகலின் உரிச்சொல்லாயிற்று”[6] (தொல் (சொல்); கி.ராசர்ப-102) என்று சேனாவரையர் உரிச்சொல்லுக்கு விளக்கம் அளிக்கிறார்.

“நால்வகைச் சொற்களுள் செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டு வரும் சொற்கள் உரிச்சொற்கள். இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள் உணர்த்துவதற்குத் தாமே உரியன ஆதலின் உரிச்சொல் என்று பெயர் பெற்றது”[7] (நன்னூல் (சொல்); ச.திருஞானசம்பந்தன்; ப-128) என்றும் கூறலாம் எனத் தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு உரையெழுதிய முனைவர் ச.திருஞானசம்பந்தம் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியர் பலரறிய வழங்கப்படும் உரிச்சொற்களை எடுத்துரைக்காமல், பேச்சு வழக்கில் இல்லாத உரிச்சொற்களையும் அவற்றிற்குரிய பொருளினையும் மட்டுமே தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பதை,

“வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன”[8]

(தொல் (சொல்); சேனாவரையர்; நூற்பா-783)

என்னும் நூற்பாவின் வழி அறிய முடிகின்றது.

தொல்காப்பிய இசை உரிச்சொற்கள்

தொல்காப்பியத்தில் இசை, குறிப்பு, பண்பு என்னும் அடிப்படையில் மொத்தம் 120 உரிச்சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் கம்பலை, சும்மை, கலி, இரங்கல், துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இசைப்பு ஆகிய ஒன்பது சொற்களும் இசைப் பொருண்மையில் அமைந்துள்ளன.

களவழி நாற்பதில் புதிய இசை உரிச்சொற்கள்

ஒலித்தலைச் சுட்டுவன, பேச்சொலிகளைச் சுட்டுவன, வண்டு உள்ளிட்ட உயிர்களின் ஒலியைச் சுட்டுவன மற்றும் ஒலிக்குறிப்புச் சொற்களை வைத்து இசை உரிச்சொற்களை அடையாளம் காணலாம். மேலும் தொல்காப்பியரின் உரிச்சொல்லிற்கான இலக்கணத்தையும் அடிப்படையாக வைத்து நாம் புதிய உரிச்சொற்களைக் கண்டறியலாம். தொல்காப்பியரால் சுட்டப்படாத உரிச்சொல்லுக்குரிய இலக்கணங்களைப் பெற்று வரும் புதிய இசை உரிச்சொற்கள் களவழி நாற்பது என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன. அவை:

- ஆர்ப்பு
- அரவம்
- ஆர்த்து

ஆர்ப்பு, அரவம்

பேராரவாரத்துடன் குதிரைகள் போர்க்களத்தில், அஞ்சாத யானைகளின் மத்தகத்தில் பாய்கின்றன. குதிரையின் ஆரவாரத்தினைக் கேட்டு யானைகள் அஞ்சாது நிற்கின்றன என்பதை,

> **“பருமம் இனமாக் கடவித் தெரிமறவர்**
> **ஊக்கி எடுத்த அரவத்தின் ஆர்ப்பஞ்சாக்**
> **குஞ்சரக் கும்பத்துப் பாய்வன குன்று இவரும்**
> **வேங்கை இரும்புலி போன்ற புனல்நாடன்**
> **வேந்தரை அட்ட களத்து”[9]**

(து.இராசகோபால் (உ.ஆ); களவழி நாற்பது; பா-16)

என்னும் பாடல் உணர்த்துகின்றது. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அரவம், ஆர்ப்பு என்னும் இரண்டு சொற்களும் இசை உரிச்சொற்களாகப் பயின்று வந்துள்ளன. குதிரையின் ஆரவாரத்தினைக் குறிக்கும் விதத்தில் இவ்விரு சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. **வீரமாமுனிவரின் சதுரகராதி, ஆர்ப்பு என்னும் சொல்லிற்கு “கட்டு, சிரிப்பு, பேரொலி, போர்”[11]** (வீரமாமுனிவர், சதுரகராதி, ப-16) என்னும்

பொருளினையும் **அரவம் என்னும் சொல்லிற்கு "ஆயிலியம், ஒலி, சிலம்பு, பாம்பு, பேரொலி"**[12] என்னும் பொருளினையும் தருகின்றது. (வீரமாமுனிவர், சதுரகராதி, ப-08) ஆக மொத்தம் ஆர்ப்பு என்னும் சொல்லும் அரவம் என்னும் சொல்லும் பேரொலியினைக் குறிக்கும் சொல்லாக அகராதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

அரவம் என்னும் சொல் ஒரு சொல் பன்முகக் கிளவியாக அமைந்தாலும் களவழி நாற்பதில் போரின் போது ஏற்படும் ஆரவாரத்தினைக் குறிக்கும் சொல்லாகப் பயின்று வந்துள்ளது. அரவம் என்னும் சொல் மறைமுகமாக, சினம் கொண்ட குதிரையின் நிலையினை உணர்த்துவதால் இங்கு வெகுளி மெய்ப்பாட்டினையும் இச்சொல் புலப்படுத்திவிடுகிறது என்பதை அறிய முடிகிறது.

களவழி நாற்பதில் இடம்பெற்றுள்ள ஆர்ப்பு, அரவம் ஆகிய இரண்டு சொற்களும் தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய நன்னூலில் ஓர்ப்பு என்னும் பொருளினைத் தரும் விதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆர்ப்பு, ஆர்த்து

ஆரவாரமிக்கப் போர்க்களத்தில் ஆட்கள் ஒருவரையொருவர் ஆயுதங்களால் தாக்குகின்றனர். தாக்குண்ட வீரர்களின் உடலிலிருந்து சொரியும் இரத்தமானது கார்த்திகை விழாவில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்குகள் போல் தோன்றுகின்றன. போர்க்கொடி ஏந்திய படைகளையும் நீர்வளம் மிக்க காவிரி நாட்டையும் உடைய சோழன் ஆரவாரித்து பகைவர்களைக் கொன்றான் என்பதை,

> **ஆர்ப்பெழுந்த ஞாட்பினுள் ஆள்ஆள் எதிர்த்தோடித்**
> **தாக்கி எறிதர வீழ்தரும் ஒண்குருதி**
> **கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்கைப் போன்றனவே**
> **போர்க்கொடித் தானைப் பொருபுனல் நீர்நாடன்**
> **ஆர்த்தமர் அட்ட களத்து"**[13]

(து.இராசகோபால் (உ.ஆ); களவழி நாற்பது; பா-17)

என்னும் பாடல் சுட்டுகின்றது. இப்பாடலில் இடம்பெற்றுள்ள ஆர்த்து, ஆர்ப்பு என்னும் சொற்கள் ஆரவாரத்தினைக் குறிக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. போர்க்களமானது எப்படியிருந்தது என்னும் சூழலைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு ஆர்ப்பு (ஆர்ப்பெழுந்த ஞாட்பு - முரசொலி, சண்டையிடும் போது கருவிகளினால் ஏற்படும் ஒலி, விலங்குகள் தாக்கப்படும் போது ஏற்படும் ஒலி) என்னும் சொல் பேருதவி புரிகிறது.

வீரமாமுனிவரின் சதுரகராதி ஆர்த்தல் என்னும் சொல்லிற்கு "அணிதல், ஒலித்தல், கட்டல், பொருதல், பொருத்தல்"[14] ஆகிய பொருண்மைகளைத் தருகின்றன. (வீரமாமுனிவர், சதுரகராதி, ப-135)

சோழன் செங்கணான் போர்க்களத்தில் ஆரவாரம் செய்து பகைவர்களைக் கொன்றான் என்பதை,

"ஞாட்பினுள் எஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்ப்
போர்ப்பில் இடிமுரசின் ஊடுபோம் ஒண்குருதி
கார்பெயல் பெய்தபின் செங்குளக் கோட்டுக்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற - புனல்நாடன்
ஆர்த்தமர் அட்ட களத்து."[15]

(து.இராசகோபால்; (உ.ஆ); களவழி நாற்பது; பா-12)

என்னும் பாடல் உணர்த்துகின்றது. இப்பாடலில் இடம்பெற்றுள்ள ஆர்த்த என்னும் சொல் ஆரவாரம் என்னும் பொருளினைக் குறிக்கின்றது. ஆரவாரம் எழுப்பி பகைவர்களைச் சோழன் கொல்கிறான். சோழன் எத்தகைய அளவிற்குச் சினத்துடன் போர் புரிந்திருப்பான் என்பதை அவன் எழுப்பிய ஆரவாரம் நமக்கு உணர்த்துகிறது. ஆர்த்து என்னும் சொல் இங்கு இசையுரிச் சொல்லாக இடம்பெறுவதோடு அல்லாமல் வெகுளி மெய்ப்பாட்டினையும் உணர்த்திவிடுகிறது.

முடிவுரை

- இசை, குறிப்பு, பண்பினை அடிப்படையாகக் கொண்டு ஒரு சொல் பல பொருளைப் பெற்றும் பலசொல் ஒரு பொருளைப் பெற்றும் பெயர், வினைகளைச் சார்ந்து செய்யுளுக்கு உரியவையாய் வருவது உரிச்சொல்லாகும்.
- போர்க்களத்தில் ஏற்படும் ஒலிகளைக் குறிக்க (போர்க்களத்தில் ஒலிக்கப்படும் முரசொலி, சண்டையிடும் போது கருவிகளின் வாயிலாக ஏற்படும் ஒலி, யானை, குதிரை முதலான விலங்குகள் போரின் போது எழுப்பும் ஒலி) ஆர்ப்பு, அரவம், ஆர்த்து என்னும் சொற்கள் களவழி நாற்பதில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகின்றது.
- களவழி நாற்பதில் ஆர்ப்பு, அரவம், ஆர்த்து ஆகிய மூன்று உரிச்சொற்களும் இசையுரிச்சொற்களாக அமைவதோடல்லாமல் மெய்ப்பாட்டினையும் (ஒலி எழுப்புபவர்களின் நிலையினை) மறைமுகமாக உணர்த்தி விடுகின்றன.

துணைநூற்பட்டியல்

1. து, இராசகோபால். *களவழி நாற்பது மூலமும் தெளிவுரையும்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், அக்டோபர் 2020.
2. இராசாராம். *பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும்*. மூன்றாம் பகுதி, சென்னை, முல்லை நிலையம், 1995.
3. வ.த, இராமசுப்பிரமணியம். *தொல்காப்பியம் எழுத்ததிகாரம் மூலமும் விளக்கவுரையும்*. சென்னை, மார்ச் 2008.
4. ச.வே, சுப்பிரமணியன். *பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும்*. முதற்பதிப்பு, சென்னை, மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், ஜீன் 2010.
5. சேனாவரையர், உரை. *தொல்காப்பியம் (சொல்லதிகாரம்)*. சென்னை, சாரதா பதிப்பகம், 2005.
6. ச, திருஞானசம்பந்தம். *பவணந்தி முனிவரின் நன்னூல் - சொல்லதிகாரம்*. திருச்சி, ராஜா பப்ளிகேஷன், நவம்பர், 2009.
7. கி, ராசா. *தொல்காப்பியம் (சொல்)*. சென்னை, பாவை பப்ளிகேஷன்ஸ், டிசம்பர், 2007.

REFERENCES

1. T, Rajagopal. *Kalavali Narpathu Source and explanation*. Chennai, New Century Book House Pvt. Ltd, October 2020.
2. Rasaram. *Eighteen Subscripts Source and Commentary*. (Part Three), Chennai, Mullai Station, 1995.
3. V.T, Ramasubramaniam. *Tholkapiyam Eluthadhigaram, Source and Commentary*. Chennai, March 2008.
4. S.V, Subramanian. *Source and Commentary on Eighteen Lesser Texts*. First Edition, Chennai, Manivaskar Offset Printers, June 2010.
5. Senavariya, Text. *Tolkappiyam (Oratory)*. Chennai, Sarada Publishing House, 2005.
6. S, Tirunnasambandham. *Nannul of Sage Bhavananti - Solathikaram*. Trichy, Raja Publication, November 2009.
7. K, Rasa. *Tolkappiyam (Lyrics)*. Chennai, Bavai Publications, December 2007.